# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்** | | **01** |
| **தலைவரின் செய்தி** | | **02** |
| **நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளரின் செய்தி** | | **03 - 04** |
| **1.** | **நிதியத்தின் பின்னணி** | **05** |
| 1.1 | நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை | |
| • | 2017 ஆம் ஆண்டிலே நிதியத்தின் பதவியணி. | **06** |
| 1.2 | நிறுவனக் கட்டமைப்பு | |
| **2.** | **2017 ஆம் ஆண்டில் நிதியத்தின் செயலாற்றுகை** | |
| 2.1 | 2017 ஆம் ஆண்டிலே பயனாளிகள் | **07 - 09** |
| 2.2 | கடன் வழங்கும் செயற்பாடு மற்றும் முன்னேற்றம் | **10** |
| 2.3 | வழங்கிய கடன் எல்லைகள் மற்றும் கடன் தொகையின் பெறுமதி | **11** |
| 2.4 | கடன் அறவீட்டின் முன்னேற்றம் | |
| 2.5 | அலுவலகக் கட்டடத் தொகுதி – லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | **12** |
| 2.5.1 | வாடகை வருமானம் | |
| 2.5.2 | நிதியத்தின் வலுவாந்தன்மை | |
| 2.5.3 | தொழிற்பாட்டு வருமானம் | **13** |
| **3.** | **சாதாரண நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி** | |
| 3.1 | ஊழியர்களின் ஊக்கத்தை விருத்தி செய்தல் | **14 - 16** |
| 3.2 | புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் | **17** |
| • | புதிய ஆட்சேர்ப்புக்கள் | |
| 3.3 | நிதியத்தின் வளாகத்தை நவீனமயப்படுத்தல் | |
| 3.4 | அலுவலகப் பணிகளை முறைப்படுத்தல் | |
| 3.5 | பதவியணிக்கான கடன் | |
| 3.6 | காணி ஒப்பனைகள் மற்றும் பிணை முறிகள் | **18** |
| 3.7 | கூட்டங்கள் | |
| 3.8 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் | |
| **4.** | **எதிர்காலத் திட்டங்கள்** | **19** |
| **5.** | **சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கைகள்** | **20** |
| **6.** | **வருமானக் கூற்று** | **21** |
| **7.** | **ஐந்தொகை** | **22** |
| **8.** | **நிதிப் பாய்ச்சல் கூற்று** | **23 - 25** |
| **9.** | **வருமானக் கூற்று** | **26** |
| **10.** | **நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்** | **27 - 33** |
| **11.** | **வரி விதிப்பு** | **33** |

# லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

## நோக்கு

அரசதுறை ஊழியர்களுக்கு நிதி வசதியளிக்கும் பிரதான நிறுவனமாகச் செயற்படல்.

## செயற்பணி

அரச துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்தல் மற்றும் இடர்களின் போது நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக திருப்திகரமான பொதுசன சேவை ஒன்றிற்கு பங்களிப்புச் செய்து சிறந்த அரச சேவையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செலுத்துதல்.

## குறிக்கோள்

அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் இலகுவான நிபந்தனைகளின் கீழ் குறுங்கால கடன்களை துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்தல்

## பணிகள்

- கடன் நிதியத்தினை நிலையாக பேணிவரும் அதே நேரம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல்.
- நிறுவனசார் மேம்பாடு மற்றும் இயலளவு விருத்தி.
- நிதியினைத் திரட்டி நிறுவனத்தை பேணிவருவதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலும் அமுலாக்கலும்.
- கடன் முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான உபாயத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் கடன் வழங்கும் வசதிகளை மேம்படுத்தல்.

## கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

**நிறுவகத்தின் பெயரும் முகவரியும்:**

- லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்
- 100/3/2,சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02.

**கூட்டிணைக்கப்படல் :**

- 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க லோஹோர் சீமாட்டி கடன் நிதியப் பொறுப்புப் சபைச் சட்டத்தின் (1953 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சட்ட நிறுவனமாகும்.

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை :**

- திரு. ஏ.பீ. குரும்பலபிட்டிய - தலைவர் (பணிப்பாளர் அரச கணக்குகள் திணைக்களம்)
- திரு. எஸ்.வின்ஸ்டன் பத்திராஜ - நிருவாகப் பொறுப்பாளர்
- திரு. டப்.டீ. ஜயசிங்க - உறுப்பினர்
- திரு. வசந்த பெரேரா - உறுப்பினர்
- திருமதி. மர்லின் திசாநாயக்க - உறுப்பினர்

**கணக்காய்வுக் குழு :**

- திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ் - தலைவர், (பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்)
- திரு. டப்.டீ. ஜயசிங்க - உறுப்பினர்
- திருமதி. மர்லின் திசாநாயக்க - உறுப்பினர்

**கணக்காய்வாளர் :**

ரன்வத்தை அன் கம்பனி,
கணக்காளர்,
141/3,வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

**உத்தியோகப்பூர்வ வங்கி :**

மக்கள் வங்கி,
தலைமையகக் கிளை,
கொழும்பு 02.

# தலைவரின் செய்தி

1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் 1951ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதியியல் சட்டத்தின் கீழ் சட்டரீதியான நிறுவனமாக மாற்றப்பட்டது. அதன்படி இந்நிறுவனத்தின் ஆரம்பம் முதல் அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு தங்கள் குறுகிய கால நிதி தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சலுகை அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படுகிறது.

தற்போது, ஆரம்ப கட்டத்தில் கடன் உதவி வழங்கப்பட்ட துறைகளை விட காலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வெவ்வேறுபட்ட தேவைகளுக்காக கடன் வழங்கப்படுவதோடு, வணிக வங்கிகளுக்கு மாற்றீடாக செயல்படும் சந்தர்ப்பமும் இந்நிதியத்திற்கு கிடைத்துள்ளது.

எனவே இந்நிதியத்திற்கு கிடைத்துள்ள இச்சந்தர்ப்பத்தை மென்மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதோடு, நிகழ்காலத்துக்கு பொருந்தும் புதிய தொழினுட்பங்களையும் பயன்படுத்தி நிதியத்தின் வேலைத்திட்டங்களை திட்டமிடுவது நிர்வாக குழுவின் முக்கிய கடமையாக காணப்படுகின்றது.

விசேட விதமாக கடன் தொல்லையிலிருந்து விடுபடுவது மட்டுமின்றி, ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் பின் அவர்களின் நிதிப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு தேவையான நடைமுறையிலுள்ள முறைமைக்குத் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு நிகழ்காலத்தின் தேவைக்கேற்ப புதிய தொழினுட்பங்களையும் பயன்படுத்தி நிதியத்தின் வேலைத்திட்டங்களை திட்டமிடுவது நிர்வாக குழுவின் முக்கிய கடமையாக காணப்படுகின்றது.

விசேட விதமாக கடன் தொல்லையிலிருந்து விடுபடுவது மட்டுமின்றி, ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் பின் அவர்களின் நிதிப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு வழி வகுக்கும் சிறிய மற்றும் பெரிய அளவிலான கைத்தொழில்களைப் புரிவதற்கு தேவையான கடன்களை அவ்வூழியர்களுக்கு வழங்குவதற்கு விசேட விதமாக கவனம் செலுத்தப்படுகிறது.

அத்துடன் நீண்ட காலமாக நிலவும் கடன் பற்றாக்குறைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக 2007ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட விசேட பிற்கருத்து செயற்திட்டத்தினால் 2017ஆம் ஆண்டு இறுதியில் நீண்ட காலமாக நிலவிய கடன் பற்றாக்குறைகளை மீளப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களிலும் கடன் பற்றாக்குறைகளை இயன்றளவு குறைவாக பேணுவதற்கு தேவையான செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதியத்தின் செயற்திட்டத்தில் நீண்டகாலமாக திருத்தங்கள் செய்யப்பட்டிராததுடன் விசேடமாக தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களுக்கு பொருந்தும் வகையில் இயக்க முறைகளையும் மாற்றும் தேவையும் அதிகமாகக் காணப்படுகிறது.

இவற்றுக்கு புறம்பாக கடன் வழங்கல், வட்டி மற்றும் தவணைப் பணத்தை பெற்றுக் கொள்ளல் உட்பட தற்போது நடைமுறையிலுள்ள கணனிமயப்படுத்தப்பட்டிருக்கும் இயக்க முறைகளை மீள்பரிசீலனை செய்து அவற்றில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய தேவைகள் இருப்பின் அது தொடர்பான விபரங்களை வழங்குவதற்கான பொறுப்புகள் நிதியத்தின் வெளிப்புற தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதியத்தில் செயற்பாடுகள் நேர்த்தியாகவும்,ஊழல்,மோசடிகள் இழிவளவாக காணப்படுவதாகவும் உறுதிப்படுத்தப்படுகிறது.

இறுதியாக 2017ஆம் ஆண்டில் நிதியம் தமது வருடாந்த செயற்திட்டத்தில் இணைத்துக்கொண்ட நோக்கங்களையும், இலக்குகளையும் அடைவதில் வெற்றி கண்டுள்ளதுடன், அந்த இலக்குகளை அடைவதற்கு நிதியத்தின் ஊழியர்கள் நிர்வாக குழு ரீதியாகவும், தனித்தனியாகவும் வழங்கிய ஒத்துழைப்பு மிகவும் உதவியாக இருந்தது. அதே போல நிதியத்தின் குழுவாகவும் தனித்தனியாகவும் அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பே நிதியம் வெற்றி அடைவதற்கு உறுதுணையாகவும், காரணமாகவும் இருந்தது.

எனவே 2017ஆம் ஆண்டில் அடைந்த வெற்றிகள் குறித்து மகிழ்வடைவதோடு மேலும் 2018ஆம் ஆண்டில் அடையவுள்ள இலக்குகளை அடைவதற்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பை தனிப்பட்ட ரீதியாகவும், நிர்வாக குழு ரீதியாகவும் நிச்சயமாக வழங்குவோம் என உறுதி கூறுகின்றேன்.

ஏ.பீ. குரும்பலபிடிய
தலைமையதிகாரி
லோஹோர் சீமாட்டி கடன்

## நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளரின் செய்தி



லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் 1927ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி ஜீன் லோஹோர் எனும் ஸ்கொட்லாந்தை சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவரின் மனைவியால் நிறுவப்பட்டது. அப்போதைய புண்ணிய ஆணையாளராக கடமையாற்றிய சீ.ஈ.வீ. நெதனியஸ் பாதிரியார் இந்நிதியத்தினை ஆரம்பிக்கும் பணிக்கு தலைமை தாங்கியுள்ளார்.

1951ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதியியல் சட்டத்தின் கீழ் இயங்கும் இந்நிதியமானது நிதி அமைச்சால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மேற்பார்வையின் கீழ், நிர்வாகப் பொறுப்பாளரால் நிர்வகிக்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி கௌரவ மைத்திரிபால சிரிசேன ஜனாதிபதியாகவும், கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் பிரதமராகவும் பொறுப்பேற்ற நல்லாட்சி இயங்கும் காலமாகிய 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி நான் இந்நிதியத்தின் தலைவராக பொறுப்பேற்றேன்.

இலங்கை நிர்வாக சேவைகள் சேவையின் ஓய்வு பெற்ற மூத்த பொது ஊழியராக இருந்த எனது முதல் நடவடிக்கையாக இந்நிதியத்தைப் பற்றி கற்பதும் இன்றைய காலகட்டத்தில் அறங்காவலர் குழுவின் வெளிப்படையான ஒப்புதல் என்னவென்று அறிந்து கொள்வதன் மூலம் அதை நோக்கி எனது பாதங்களைப் பதிக்க நடவடிக்கை எடுப்பதுமாகவே இருந்தது.

இந்நிதியத்தில் எனது பதவி காலமாகிய கடந்த மூன்று வருடங்களுக்குள் அரசாங்க ஊழியர்களுக்கான கடன்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எளிதாக்கப்பட்டதுடன், நிதியத்தின் நிர்வாகம் கணக்கியல் மற்றும் தகவல் ஆகிய மூன்று துறைகளும் கடன் வழங்குவதன் மூலம் ஏற்படும் போட்டிகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் அன்றைய நாளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நெறிப்படுத்தப்பட்டன.

கடந்த 30 வருட காலமாக அதியுயர் கடன் தொகையாக வழங்கபட்டு வந்த ரூபா 50,000 கடன் தொகையானது அரச ஊழியர்கள் அல்லாத பொது ஊழியர்களுக்கு ரூபா 100,000 ஆகவும், அரச தர அதிகாரிகளுக்கு ரூபா 250,000 ஆகவும் உயர்த்தப்பட்டன.

நாட்டில் இருக்கும் எளிமையான வழிமுறையின் படி கடந்த காலங்களில் கடனுக்கான விண்ணப்பப்படிவத்தை நிரப்பிய பின் கடனை வழங்குவதற்கு 2 - 3 மாதங்கள் கடந்தன. அத்துடன் முன்பு லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தில் மட்டும் வந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த விண்ணப்பப்படிவங்கள் தற்போது இலங்கையின் சகல பகுதிகளிலும் உள்ள மக்களும் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மூன்று மொழிகளுக்குமான விண்ணப்பப்படிவங்களும் எமது உத்தியோக பூர்வமான வலை தலத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் மாதாந்தம் வழங்கிய 386 ஆகிய கடன் தொகையானது 2015 ஆம் ஆண்டு மாதாந்தம் வழங்கிய கடன் தொகையாகிய 372 கடன் தொகையுடன் ஒப்பிடுகையில் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் 2015 ஆம் ஆண்டில் வழங்கிய ரூ.24 மில்லியனாகிய கடன் தொகையானது 2017 ஆம் ஆண்டாகும் போது ரூ.33 மில்லியன் வரை விரிவடைந்துள்ளது. லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் 2வது மற்றும் 3வது மாடிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் மாதாந்தம் ரூபா. 2 மில்லியன் வாடகை வருமானமாக கிடைக்கப்படுகின்றது. இவ்வருமானமானது மாத ரீதியான மற்றும் செலவீட்டு செலவினங்களின் ¾ பங்கை பூர்த்தி செய்கிறது. இந்நிலையிலும் 2015ஆம் ஆண்டின் போது நிறுவனம் இலாபமாக உழைத்த ரூ.17.1 மில்லியன் ரூபாவானது 2017ஆம் ஆண்டின் போது ரூ30 மில்லியனாக விரிவடைந்தது.

வாடிக்கையாளர்களின் நன்மைக் கருதி அவர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் நிறுவனத்தில் காணும் குறைகள் என்பவற்றை எம்மோடு பகிர்ந்துக் கொள்வதற்கு ஓர் வாய்ப்பு வழங்கும் வண்ணம் கருத்துப் பெட்டியொன்று நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தினமும் ஆராயப்பட்டு அவை கருத்தில் கொள்ளப்படுவதுடன், அவர்கள் தெரிவிக்கும் குறைகள் பற்றியும் உரிய அதிகாரிகளுடன் உரையாடி தகுந்த தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

ஜீன் சீமாட்டியால் நிறுவப்பட்ட லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கமும் இலக்கும் தற்போது அடையப்பட்டுள்ளது. 25 மாவட்டங்களையும் சேர்ந்த சகல பொது ஊழியர்களும் எந்தவித சிக்கல்களும், தாமதங்களும், பாகுபாடுகளும் இன்றி இக்கடன் சேவையை அனுபவிக்கின்றனர்.

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் வெற்றிகரமான சேவையின் 90ஆவது ஆண்டின் பூர்த்தியானது 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி எனது தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது. அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வில் நிதி அமைச்சரும், ஜீன் சீமாட்டியின் பேரனாகிய திரு. ஜோன் ஹெமிஸ் அவர்களும், அவர்களின் மனைவியும், கலந்து கொண்டதுடன் உள்நாட்டு பத்திரிகை ஊடகங்கள் மற்றும் மின்னணுவியல் ஊடகங்களும் கலந்து கொண்டன.

இந்த நிகழ்வின் போது திரு. ஜோன் ஹெமிஸ் அவர்களால் ஒரு மகிழ்ச்சிகரமான கூற்று கூறப்பட்டது. அதாவது ''தனது பாட்டியான ஜீன் லோஹோர் இன்றும் உயிரோடு இருந்து இருந்தால் அவர் உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருந்து இருப்பார் என்றும் அதற்கு காரணம் அவர் 1927ஆம் ஆண்டு முதலீடு செய்து ஆரம்பித்து வைத்த இந்த கடன் நிதியமானது இன்று நிதிப் பிரச்சினையால் வாடும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பாகுபாடின்றி கடனுதவி வழங்குவதனாலாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது நிதியத்தின் மூலம் வழங்கும் கடன் வசதியினை தொலைப் பிரதேசங்களில் உள்ள மக்களும் எந்த விதகால தாமதங்களும் இன்றி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் இந்நிதியத்தின் 10 கிளைகளை அமைப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட செயல்திட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட எம்மிடம் காணப்படும் நிதி பிரச்சினைகள் காரணமாக அவற்றை விரைவிலேயே நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. இருப்பினும் வெகு விரைவிலேயே இந்த செயல்திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தற்போது எமது நிதியத்தில் கடன் பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகருத்துள்ளதுடன் இன்று பொது ஊழியர்களின் மத்தியில் எமது நிதியம் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

அத்துடன் எனது சேவையில் வெற்றி காண எனக்கு ஆலோசனைகளையும்,ஒத்துழைப்பையும் வழங்கிய கௌரவ நிதி அமைச்சர்,மாகாண அமைச்சர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் என்னுடைய முயற்சிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கும், எனது இலக்குகளை அடைவதற்கும் எனக்கு ஒத்துழைக்கும் எமது நிதியத்தின் அனைத்து ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் எனது ஆக்கப்பூர்வமான, வெற்றியளிக்கக்கூடிய, தூரநோக்குடைய திட்டங்களைக் கொண்டு இந்நிதியத்தினை விரிவுப்படுத்தவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுவேன் என உறுதியளிக்கின்றேன்.

எஸ்.வின்ஸ்டன் பதிராஜ
நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளர்
லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

# 01

# நிதியத்தின் பின்னணி



ஜீன் லோஹோர் சீமாட்டி.

இலங்கையிலே சிறிது காலம் வசித்து வந்த ஸ்கொட்லாந்து நாட்டவரான ஜீன் லோஹோர் சீமாட்டியினால் கடன் நிதியம் ஒன்றினை நிருவுவதற்கு தேவையான ஆரம்ப மூலதனமாக 300 பவுன் பெறுமதியான தொகை அன்பளிப்பு செய்யப்பட்டது. அப்போதைய புன்னிய ஆணையாளராக இருந்த சீ.ஈ.வி. நெதனியல் பாதிரியார் இந்நிதியத்தினை ஆரம்பிக்கும் பணிக்கு தலைமை தாங்கியுள்ளதுடன் இந்நிதியமானது 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1951 ஆம் ஆண்டின் 38ஆம் இல்கக லோஹோர் சீமாட்டி கடன் நிதிய சட்டத்தின் ஊடாக இந்நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டது.

அன்று முதல் இந்நிதியத்தின் பயனாளிகளுக்கு கடன் வழங்கி மற்றும் அவற்றினை மீள அறவிட்டு தொழிற்பாட்டு ரீதியிலான ஒரு நிதியமாக இயங்கி வந்துள்ளது. அரச துறை மற்றும் வர்த்தக கம்பனிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களும் தமது குறுங்கால நிதி தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அப்போது காணப்பட்ட வங்கி முறைமையின் ஊடாக அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமையினால் அவ்வாறானவர்கள் கூடிய வட்டி வீதத்தில் கடன் வழங்கும் நபர்களிடமிருந்து கடன் பெறுவதை பழக்கமாக கொண்டிருந்தனர். இவ்வாறான ஒரு பின்னணியில் அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்கள் கடன் சுமையினால் பீடிக்கப்பட்டார்கள். இவ்வாறான ஒரு சூழலில் லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் நிறுவப்பட்டதுடன் அதன் பின்னர் அவ்வாறான ஊழியர்களுக்கு கடன் பெறுவதில் பாரிய நிவாரணம் கிடைக்கப்பெற்றது. 1951ஆம் ஆண்டிலே இச்சட்டம் கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் இந்நிதியத்திற்கு அரசாங்கத்தினாலும், வேறு நன்கொடையாளர்களிடம் இருந்தும் கிடைக்கப்பெற்ற அன்பளிப்புக்களை பயன்படுத்தி இந்நிறுவனத்திற்கு சொந்தமான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## 1.1 நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை



நம்பிக்கை பொறுப்பாளர் சபையானது கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற அரச துறை மற்றும் தகைமைமிக்க தனியார் துறை பிரதிநிதிகளை கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் போசகராக நிதி அமைச்சர் பணியாற்றுகின்றார். நிதியத்தின் நிருவாகப் பணிகளுக்காக நிருவாக நம்பிக்கை பொறுப்பாளர்கள் சட்டத்தின் 10வது மற்றும் 11 ஆவது பிரிவுகளின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களில் இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அச்சட்டத்தின் 5வது பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தலைவர் பதவி பொதுத் திறைசேரியின் பிரதிநிதிக்கு வழங்கப்படுகின்றது.

## 1.2 அட்டவணை 01 – 2017ஆம் ஆண்டிலே நிதியத்தின் பதவியணி

| அனுமதிக்கப்பட்ட பதவியணி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது பணியாற்றுவோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| கணக்காளர் | 01 | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| கணக்கு அலுவலர் | 01 | 01 |
| உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | 01 | 01 |
| கடன் அறவீட்டு அலுவலர் | 01 | 01 |
| தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 01 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தரம் (ஆவணக் காப்பக உதவியாளர் உட்பட) | 34 } 35 | 32 |
| கட்டட மேற்பார்வையாளர்(முகாமைத்துவ உதவியாளர்-(தொழில்நுட்பத் தரம்) | 01 | - |
| அலுவலக உதவியாளர்<br>பங்களா பொறுப்பாளர் } | 07 | 07 |
| பங்களா பராமரிப்பு உதவியாளர் | 01 | 01 |
| சாரதி | 02 | 02 |
| **மொத்தம்** | **51** | **48** |

## 1.3 நிறுவனக் கட்டமைப்பு



# 2

## 2017ஆம் ஆண்டிலே நிதியத்தின் செயலாற்றுகை

### 2.1 2017ஆம் ஆண்டின் புதிய பயனாளிகள்

2017 ஆம் ஆண்டிலே அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 4062 ஊழியர்கள் இந்நிதியத்தின் பயனாளிகளாகியுள்ளனர். அப்பயனாளிகள் வசிக்கும் மாவட்டங்களுக்கேற்ப இரண்டாம் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டிலே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் எண்ணிக்கையில் 10.47% அதிகரிப்பொன்று காணப்படுவதுடன் கடன் தொகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.9% வளர்ச்சியினைக் காட்டுகின்றது. பயனாளிகளில் 75% இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது மூன்றாம் அட்டவணையில் புலனாகின்றது.

**அட்டவணை 02 - 2016/2017 ஆம் ஆண்டுகளில் கடன் பெற்றுக் கொண்ட அரச மற்றும் அரை அரச ஊழியர்கள்**

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2017 | (%) | 2016 | (%) |
| கொழும்பு | 612 | 15.07 | 531 | 14.44 |
| கம்பஹா | 711 | 17.50 | 561 | 15.26 |
| அநுராதபுரம் | 234 | 5.76 | 257 | 6.99 |
| கண்டி | 230 | 5.66 | 205 | 5.58 |
| வவுனியா | 04 | 0.098 | 04 | 0.11 |
| களுத்தரை | 423 | 10.41 | 338 | 9.19 |
| இரத்தினபுரி | 164 | 4.04 | 154 | 4.19 |
| காலி | 234 | 5.76 | 205 | 5.58 |
| குருணாகலை | 372 | 9.16 | 368 | 10.01 |
| புத்தளம் | 42 | 1.03 | 52 | 1.41 |
| யாழ்ப்பாணம் | 00 | 0.00 | 01 | 0.03 |
| பொலன்னறுவை | 85 | 2.09 | 107 | 2.91 |
| திருகோணமலை | 19 | 0.47 | 15 | 0.41 |
| முல்லைத்தீவு | 01 | 0.02 | 03 | 0.08 |
| பதுளை | 161 | 3.96 | 146 | 3.97 |
| மாத்தளை | 92 | 2.22 | 77 | 2.09 |
| ஹம்பாந்தோட்டை | 100 | 2.46 | 111 | 3.02 |
| கேகாலை | 222 | 5.47 | 212 | 5.77 |
| மட்டக்களப்பு | 03 | 0.07 | 04 | 0.11 |
| அம்பாறை | 68 | 1.67 | 68 | 1.85 |
| மொணராகலை | 105 | 2.58 | 93 | 2.53 |
| நுவரெலியா | 56 | 1.38 | 58 | 1.58 |
| மாத்தறை | 124 | 3.05 | 107 | 2.91 |
| மொத்தம் | 4062 | 100 | 3677 | 100 |

**வரைபு -01 2016/2017 ஆண்டுகளில் கடன் பெற்றுக்கொண்ட அரச மற்றும் பகுதி அரச ஊழியர்களின் பயனாளிகள் மாவட்ட ரீதியில்**



**அட்டவணை 03 – 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் அரச ஊழிய பயனாளிகளின் பதவிகள்**

| பதவி | 2017 | 2016 |
|---|---|---|
| கோப்ரல் | 687 | 1117 |
| இராணுவ சிப்பாய் | 426 | 699 |
| இராணுவ சார்ஜன் | 84 | 121 |
| மேஜர் | 22 | 16 |
| லுதினன் | 9 | 8 |
| சமையற்காரர் | 21 | 28 |
| சிற்றுண்டிசாலை ஊழியர் | 30 | 32 |
| பொலிஸ் கான்ஸ்டபல் | 1185 | 496 |
| பொலிஸ் சார்ஜன் | 277 | 120 |
| பொலிஸ் பரிசோதகர் | 46 | 31 |
| உப பொலிஸ் பரிசோதகர் | 60 | 28 |
| பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் | 26 | 23 |
| பொலிஸ் சிவில் உதவியாளர் | 0 | 0 |
| தீயணைப்புப் படையினர் | 20 | 15 |
| சாரதிகள் | 134 | 105 |
| சிறைச்சாலை மேற்பார்வையாளர் | 55 | 26 |
| அளவீட்டு உதவியாளர் | 36 | 26 |
| சுகாதார நிருவாக அலுவர் | 0 | 0 |
| சுகாதார சிற்றூழியர் | 4 | 3 |
| சாதாரண தொழிலாளர் | 288 | 232 |
| அலுவலக உதவியாளர் | 247 | 226 |
| முகாமைத்துவ உதவியாளர் | 162 | 116 |
| அபிவிருத்தி உதவியாளர் | 22 | 9 |
| காவற்காரர் | 4 | 11 |
| மோட்டார் தொழினுட்பவியலாளர் | 6 | 4 |
| தொழினுட்பவியலாளர் | 0 | 0 |
| தச்சு வேலை உத்தியோகத்தர் | 2 | 4 |
| மனிதவள உதவியாளர் | 0 | 0 |
| நிருவாக உத்தியோகத்தர் | 2 | 1 |
| மேசன் | 3 | 3 |
| கணக்காளர் | 12 | 5 |
| களஞ்சிய உதவியாளர் | 3 | 1 |
| மின்சார தொழினுட்பவியலாளர் | 2 | 1 |
| மேற்பார்வையாளர் | 2 | 1 |
| தபால் அலுவலர் | 3 | 4 |
| உதவிப் பணிப்பாளர் | 1 | 2 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 0 | 1 |
| புத்தக கட்டுநர் | 1 | 3 |
| கிராம சேவை உத்தியோகத்தர் | 0 | 0 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 6 | 3 |
| ஆணை பெறாத அலுவலர் | 4 | 4 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 10 | 9 |
| அளவீட்டு உதவியாளர் | 0 | 6 |
| தாதியர் | 2 | 9 |
| கபித்தான் | 34 | 23 |
| யானைப்பாகன் | 1 | 5 |
| மின்விளக்கு ஏற்றுனர் | 0 | 1 |
| இயந்திர இயக்குனர் | 3 | 1 |
| தொழிநுட்ப அலுவலர் | 2 | 1 |
| தபால்காரர் | 7 | 3 |
| மொழிப்பெயர்ப்பாளர் | 0 | 1 |
| கர்னல் | 0 | 5 |
| முன்பள்ளி ஆசிரியர் | 0 | 2 |
| நூலகர் | 1 | 1 |
| நூலக உதவியாளர் | 1 | 0 |
| பணிப்பாளர் | 1 | 4 |
| புகைப்படவியலாளர் | 108 | 0 |
| ஏனைய | 0 | 81 |
| **மொத்தம்** | **4062** | **3677** |

## 2.2 2017 ஆம் ஆண்டில் கடன் வழங்கும் செயற்பாடும் அதன் முன்னேற்றமும்

பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த அரச ஊழியர்கள் அல்லது பகுதி அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் இந்நிதியத்திலிருந்து கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும்

- ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய அரச சேவையில் பணியாற்றுகின்ற மூன்று வருடங்கள் ஆகக் குறைந்த சேவைக்காலத்தைக் கொண்டுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அரச ஊழியராக இருத்தல்.
- பகுதி அரச நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியராயின் ஆகக் குறைந்தது 5 வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையினை முழுமையாக மீள அறவிட்டுக் கொள்கின்ற அளவிற்கு போதிய சேவைக் காலத்தினை கொண்டிருத்தல். (ஓய்வு பெறும் வயதெல்லை 55 வருடங்களாகக் கொள்ளப்படும்)
- விண்ணப்பதாரர்கள் மேற்படி தகைமையுள்ள இரண்டு பிணையாளர்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- பகுதி அரச நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவராயின் இரண்டு பிணையாளர்களில் ஒருவர் ஆகக் குறைந்தது 3 வருட நிரந்தர சேவைக்காலத்தைக் கொண்டுள்ள, ஓய்வூதிய சம்பளம் உடைய மற்றும் அரச சேவையில் பணியாற்றும் ஒருவராக இருத்தல் வேண்டும்.
- அனைத்து கடன் விண்ணப்பதாரிகளினதும் மாதாந்த சம்பளத்தில் 40% எல்லையினுள் கடன் தவணையினை மீள அறவிட்டுக் கொள்ளக் கூடிய இயலுமை இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை பெறுவோரிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்பத்திரங்கள் மற்றும் கடன் வழங்கல் தொடர்பான 2017 ஆம் ஆண்டிற்கான அட்டவணைப் பின்வருமாறு:

அட்டவணை – 04 - கடன் வழங்கும் செயற்பாடு - 2017

| மாதம் | விண்ணப்பதாரிகள் | கடன் வழங்கிய எண்ணிக்கை | கடன் பெறுமதி (ரூ 000) |
|---|---|---|---|
| ஜனவரி | 273 | 273 | 24,500 |
| பெப்ரவரி | 276 | 251 | 22,600 |
| மார்ச் | 426 | 401 | 36,720 |
| ஏப்ரல் | 193 | 253 | 23,100 |
| மே | 324 | 267 | 24,700 |
| ஜூன் | 357 | 351 | 31,870 |
| ஜுலை | 316 | 319 | 28,890 |
| ஆகஸ்ட் | 474 | 439 | 40,240 |
| செப்டெம்பர் | 445 | 374 | 33,340 |
| ஒக்டோபர் | 400 | 405 | 35,990 |
| நவம்பர் | 375 | 367 | 32,260 |
| டிசம்பர் | 344 | 362 | 31,440 |
| மொத்தம் | 4203 | 4062 | 365,720 |




2017ஆம் ஆண்டிலே கடன் பெறுவதற்காக விண்ணப்பித்தோர் தொகை 4203 ஆக இருந்த போதிலும் 4062 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் யாதெனின் கடன் கோரிய பலர் கடனை பெற்றுக் கொள்ள வருகைத் தராமை என குறிப்பிடலாம்.

**வரைபு–2: கடன் வழங்கும் செயற்பாடு 2017**

## 2.3 வழங்கிய கடன் எல்லை மற்றும் கடன் தொகையின் பெறுமதி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் கடன் எண்ணிக்கையில் 10.47% அதிகரிப்பு காணப்படுவதோடு, கடன் தொகையிலும் 19.9% வளர்ச்சி காணப்படுகின்றது. 2016ஆம் ஆண்டு முதல் அதிக வட்டி வருமானத்தை உழைக்கும் நோக்கில் கடன் தொகையில் பாரிய பகுதியை ரூ.250,000.00 மற்றும் ரூ.100,000.00 ஆகிய கடன் தொகை பிரிவுகளுக்கு உட்படுத்தல் மற்றும் நிதியத்தின் கடன் வழங்கல் செயற்திட்டம் தொடர்பாக கடிதங்களின் மூலம் நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பலனாக 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.250,000.00 கடன் தொகை 116% ஆகவும் ரூ.100,000.00 கடன் தொகை 27% ஆகவும் ஒரு சாதகமான அதிகரிப்பை அடைந்தததன் மூலமாக 2016ஆம் ஆண்டை விட 2017ஆம் ஆண்டில் கடன் எண்ணிக்கையும், கடன் தொகையும் அதிகரித்துள்ளது.

அட்டவணை 05 – கடன் வரையறைக்கு ஏற்ப முன்னேற்றம்

| அதிகூடிய கடன் எல்லை | வழங்கிய கடன்களின் எண்ணிக்கை | கடன் தொகையின் பெறுமதி (ரூ.000) |
|---|---|---|
| 250,000 | 78 | 1,950,0000 |
| 100,000 | 2985 | 298,500,000 |
| 50,000 | 866 | 4,330,0000 |
| 40,000 | 65 | 2,600,000 |
| 30,000 | 46 | 1,380,000 |
| 20,000 | 22 | 440,000 |
| 10,000 | 0 | 0 |
| **மொத்தம்** | **4062** | **365,720,000** |

## 2.4 கடன் மீள அறவிடலின் முன்னேற்றம்

2014 தொடக்கம் 2017ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய கடன் வழங்கள் மற்றும் மீள அறவிடல் பற்றிய முன்னேற்றம் 6ம் அட்டவணையிலும் 3ஆம் வரைபிலும் காட்டப்படுகின்றது. 2017ஆம் ஆண்டிலே மிகவும் கவர்ச்சிகரமான முன்னேற்றம் ஒன்றினை காணக்கூடியதாக உள்ளது.

- கடன் வழங்கல் - முன்னேற்றம் - 19.9%
- கடன் மீள அறவிடல் - முன்னேற்றம் - 13.8%

அட்டவணை 06 – 2014 முதல் 2017 வரையில் கடன் வழங்கல் மற்றும் கடன் மீள அறவிடல்

| ஆண்டு | கடன் எண்ணிக்கை | கடன் வழங்கல் (ரூ.000) | கடன் மீள அறிவிடல் (ரூ.000) |
|---|---|---|---|
| **2014** | 5122 | 203,505 | 252,973 |
| **2015** | 4636 | 284,860 | 273,868 |
| **2016** | 3676 | 305,000 | 342,358 |
| **2017** | **4062** | **365,720** | **389,506** |

### வரைபு–3 : கடன் வழங்கல் மற்றும் கடன் மீளப்பெறல்



## 2.5 அலுவலக கட்டிடத் தொகுதி – லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

### 2.5.1. வாடகை வருமானம்

லோஹோர் சீமாட்டி கடன் நிதிய கட்டடத்தில் 5,500 சதுர அடி பரப்பளவு நிதியத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் மீதமுள்ள இடவசதி பின்வரும் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்து 2017ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் வாடகை வருமானமாக 17.5 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 07 – 2017 ஆம் ஆண்டின் வாடகை வருமானம்

| தொடர் இல | நிறுவனம் | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடம் | சதுரஅடி அளவு | வருமானம் (ரூ.000) |
|---|---|---|---|---|
| 01 | லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | 3வது மாடி | 5,500 | - |
| 02 | வாகன தரிப்பிடம் | தரை மாடி | 5,290 | - |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி | கீழ் மாடி | 5,500 | 6,300,000 |
| 04 | கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு | 1ஆம் மாடி | 2,415 | 2,462,790 |
| 05 | இலங்கை மின்சார சபை | 1ஆம், 2ஆம் மாடி | 4,700 | 4,500,000 |
| 06 | இலங்கை மின்சார சபை - தகவல் பிரிவு | 2ஆம் மாடி | 2,750 | 2805,000 |
| 07 | அரசாங்க தொழில் முயற்சிகள் கமிஷன் சபை | 2ஆம் மாடி | 840 | 960,000 |
| 08 | ஏ.ஜே.எஸ் எஸோஸியேட்டட் நிறுவனம் | இல: 100/20 | 380 | 480,000 |
| | மொத்தம் | | **27,375** | **17,507,790** |

### 2.5.2 நிதியத்தின் நிலைத்திருக்கும் தன்மை

நிதியத்தின் தொழிற்பாடு மற்றும் நிதி செயற்பாடுகள் என்பவற்றைப் பேணி வருவதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இந்நிறுவனம் பொதுத் திறைசேறியின் மீது அல்லது வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகளின் மீது தங்கி வாழும் ஒரு நிறுவனம் அல்லாததோடு ஊழியர்களின் சம்பளம் உட்பட அனைத்து வித செலவுகளையும் வட்டி வருமானம் மற்றும் கட்டிட வாடகை வருமானம் என்பவற்றின் மூலம் மேற்கொள்கின்றது. வட்டி வருமானத்தின் மூலம் தொழிற்பாட்டின் ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்படுவதுடன் அறவிட முடியாக் கடன்,நிர்வாக செலவினங்கள் மற்றும் கடன் மீள அறவீடு என்பவற்றுக்காக ஏற்படுகின்ற செலவினங்கள் அடங்கலாக ஏனைய அனைத்து செலவினங்களும் மேற்படி வருமானத்தின் மூலம் ஈடுசெய்யப்படுவதின் பின்னர் எஞ்சும் உபரியை நிதியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மக்கள் வங்கியில் நிலையான வைப்பிலிடப்பட்டுள்ளது.

அட்டவணை 08 – முதலீடுகள்

| முதலீட்டு வகைகள் | வங்கி | 2017/12/31 (ரூ) | 2016/12/31 (ரூ) |
|---|---|---|---|
| நிலையான வைப்புக்கள் | மக்கள் வங்கி | 71,560,042 | 76,201,532 |
| நிலையான வைப்புக்கள் | தேசிய சேமிப்பு வங்கி | 16,828,012 | 15,513,431 |
| மொத்தம் | | **88,388,054** | **91,714,963** |

### 2.5.3 தொழிற்பாட்டு வருமானம்

2017ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானம் 97 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்ததுடன் தேறிய தொழிற்பாட்டு மிகையானது 41.6 மில்லியன் ரூபாவாகும். 2016ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு வருமானம் மற்றும் தேறிய தொழிற்பாட்டு மிகை முறையே ரூ.79 மில்லியன் மற்றும் ரூ.22 மில்லியன் ஆகும். 2016ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானமான 22 மில்லியன் ரூபாவோடு ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் தொழிற்பாட்டு வருமானமானது 19.6 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பை அடைந்துள்ளது. 2017.12.31ஆம் திகதியன்று தொழிற்படா கடன் ஏற்பாடுகள் ஒதுக்கல் கணக்கில் இருந்த மீதியானது 2017ஆம் வருடத்தின் வருமானத்தோடு இணைக்கப்பட்டமையாலும் நிலையான வைப்புக்களின் வட்டியானது ஒப்பீட்டளவில் உயர்வடைந்ததாலும் 2017ஆம் ஆண்டின் வட்டி வருமானம் அதிகரித்தமையாலும்,நிதி அமைச்சால் 2015ஆம் ஆண்டில் கிடைத்த மோட்டார் வாகனங்கள் 2 இற்குமான கட்டணங்கள் மற்றும் கைமாற்றப்பட்டதன் பின்னர் நிதி அமைச்சு அன்பளிப்பாக இறுதி கணக்கில் காட்டப்பட்ட தொகை 2016-2020 வருடங்கள் வரை இலாபத்தோடு இணைக்க வேண்டும் என்பதால் அந்த பெறுமதியில் 2017ஆம் ஆண்டுக்கு உரிய பங்குகள் வருட இலாபத்தில் இணைக்கப்பட்டதாலும், கட்டிட கூலி வருமானம் அதிகரித்தமையினாலும் தொழிற்பாட்டு மிகை 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் 22%ஆல் அதிகரிப்பினும் அதோடு ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு செலவு 3% போன்ற குறைந்த வேகத்தில் வளர்ச்சி அடைந்ததினால் 2017ஆம் ஆண்டின் வருமானம் வளர்ச்சியடைந்ததற்கு சமாந்தரமாக தேறிய தொழிற்பாட்டு மிகை 85% ஆல் அதிகரித்துள்ளது.

வரைபு 4 - தொழிற்பாட்டு மிகையும் தொழிற்பாட்டு வருமானமும் 2014 - 2017



# 03
# சாதாரண நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி

## 3.1 ஊழியர்களின் உந்துதலை அதிகரித்தல்

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் இலக்குகள்,நோக்கங்கள், குறிக்கோள் என்பவற்றை அடைவதற்காக நிதியத்தின் ஊழிய உந்துதலை அதிகரிப்பதன் மூலம் சக்திவாய்ந்த ஊழியர்களை உருவாக்குவதுடன் திறன்,உற்பத்தி திறன், திருப்தி மற்றும் ஒற்றுமையை அபிவிருத்தி செய்தலும் அதன் ஊடாக அதிகமான பிரதிபலன்களை கொண்ட சேவையை வழங்கும் நோக்கில்ஊழியர்களின் துறைகளுக்கு ஏற்ற வகையில் 2017ஆம் ஆண்டு முழுவதிலும் 16 பயிற்சி பட்டறைகள் நடாத்தபட்டன. அப்பயிற்சிகளுக்காக நிதியத்திலிருந்து அதிகளவான நிதியும் ஒதுக்கப்பட்டது.

| திகதி | பயிற்சி வழங்கிய நிறுவனம் | பயிற்சி பட்டறை | பங்கேற்ற ஊழியர்கள் |
|---|---|---|---|
| 2017.03.27- 2017.03.28 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | நிறுவன விதி முறைகளும் கட்டளை மற்றும் சட்டத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக | பிரதான முகாமைத்துவ உதவியாளர் 1 முகாமைத்துவ உதவியாளர் - 111 |
| 2017.04.27- 2017.04.28 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | கணக்குப் புத்தகங்களை நேர்த்தியான முறையில் நடாத்திச் செல்லல் | முகாமைத்துவ உதவியாளர்111 - 2 |
| 2017.05.22- 2017.05.23 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | ஒழுக்க நடைமுறைகள் | நிருவாக உத்தியோகத்தர் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் |
| 2017.05.25- 2017.05.26 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | அலுவல உதவியாளர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் | அலுவலக உதவியாளர் 01 |
| 2017.07.04- 2017.07.05 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | அரச திறன்கள், முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பப் பயன்பாடுகள் தொடர்பாக | சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் 111 – 01 முகாமைத்துவ உதவியாளர் 1 - 02 |
| 2017.07.19- 2017.07.20 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | தனிப்பட்ட ஆவணங்களை நடைமுறைப்படுத்தல் | முகாமைத்துவ உதவியாளர் 111 - 01 |
| 2017.07.27- 2017.07.28 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறைகள் | முகாமைத்துவ உதவியாளர் - 111 - 03 |
| 2017.07.29- 2017.07.30- | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | வருடாந்த உபகரணங்கள் ஆய்வு மற்றும் வசதி | முகாமைத்துவ உதவியாளர்111 - 01 |
| 2017.08.28- 2017.08.29 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | பயனுள்ள அரச ஊழியர்களுக்கு கணக்கீடு தொடர்பாக | முகாமைத்துவ உதவியாளர் 1 - 02 |
| 2017.09.07 | PRAG INTITUTE | கணக்கியல் கேள்விகளுக்கு பதிலளித்தல், சரிப்படுத்தல் செயன்முறை மற்றும்தொழிற்பாட்டு மிகை கணக்கீடு | உள்ளக கணக்காளர் - 01 |
| 2017.09.23- 2017.09.24 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | "மாற்றங்கள் மேற்கொள்ளலாம்" ஆளுமை விருத்தி மற்றும் உந்துதலை அதிகரித்தல் | நிதியத்தின் 36 ஊழியர்கள் பங்கு கொண்டனர். (பி.மு.உ – 01, சி.மு.உ – 03, மு.உ 24, சாரதி – 01, அ.உ – 06, க.மே – 01) |
| 2017.09.28- 2017.09.29 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | நஷ்டங்களை மதிப்பிடல், பெறுமான தேய்வு, மற்றும் வெட்டி விடுதல் தொடர்பாக | கணக்காளர் - (நடுநிலை முகாமையாளர்) - 01 |
| 2017.10.18 | நிர்மானம் மற்றும்இயந்திரப் பயன்பாடு பயிற்சி நிலையம் CETRAC | சாரதிகளுக்கு பாதுகாப்பான முறையில் விவேகமாக வாகனங்களை செலுத்துதல் தொடர்பாக | அலுவலக உதவியாளர் 111/சாரதி – 01 |
| 2017.10.23- 2017.10.24 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | அபிவிருத்தி உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தொழில் அபிவிருத்தி | முகாமைத்துவ உதவியாளர் 11 - 02 |
| 2017.10.26 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | HOW TO BE A BRILLIANT MANAGER | நிருவாக உத்தியோகத்தர் முகாமைத்துவ உதவியாளர் 111 01 |
| 2017.12.14- 2017.12.15 | தி.வி.நி (ஆளுமை விருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம்) | அலுவலக உபகரணங்கள் முகாமை | முகாமைத்துவ உதவியாளர் 111 – 02 |

மேற்குறிப்பிட்ட பயிற்சி பட்டறைகளுக்கு நிதியத்தின் ஊழியர்களைப் பங்குப்பற்ற செய்ததன் மூலம் நிதியத்தின் செயற்பாடுகளின் போது முன்பை விட பயனுள்ளதாகவும், வினைத்திறனுடையாதாகவும் செயற்படுவதையும், முன்பிருந்த நிலையை விட தெளிவான ஒரு முன்னேற்றம் காணப்படுவதையும் அவதானிக்ககூடியது மகிழ்ச்சியாகும். அப்பயிற்சி பட்டறைகளின் போது பெற்றுக் கொண்ட அனுபவங்களையும், ஆளுமைகளையும் தமது அன்றாட வேலைகளின் போது பயன்படுத்தியமையால் தத்தமது வேலைகளை நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்ல நிதியத்தின் ஊழியர்களுக்கு முடியுமாக இருந்தது. அத்தோடு ஆளுமைகளையும், திறமைகளையும் தமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் விருத்தி செய்துக் கொள்ளவும், லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் இலக்குகளை நோக்கி பயனிக்கவும் குறித்த பயிற்சிப் பட்டறைகள் மிகவும் உறுதுணையாக உள்ளன.

**இதற்கு மேலதிகமாக ஊழிய உந்துதலை அதிகரிப்பதற்காக 2017.09.23 மற்றும் 2017.09.24 ஆகிய தினங்களில் திறன் விருத்தி பயிற்சி நிறுவனத்தினால் இரத்தினசிரி விக்ரமநாயக்க தேசிய பயிற்சி நிறுனத்தில் நடாத்தப்பட்ட வெளிக்கள பயிற்சி பட்டறைக்கு நிதியத்தின் ஊழியர்கள் 36 பேர் கலந்துக் கொண்டனர்.**

இந்த வெளிக்கள பயிற்சி பட்டறையின் மூலம் நடாத்தப்பட்ட சகல பயிற்சிகளிலும், குறைந்தளவு எத்தனங்களைக் கொண்டு குழுவின் இலக்குகளை எவ்வாறு வெற்றிகரமாக அடைவது என்பது பற்றியே கற்றுக்கொடுக்கப்பட்டது.அப்பயிற்சிகளை எமது நிதியத்தின் இலக்குகளை அடைவதற்கு ஏற்றவாறு உபயோகிப்பதுடன் குழு ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் ஊழியர்களுக்கிடையில் அந்நியோன்னிய உறவை ஏற்படுத்துவதுடன் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைய பெறும் உறுதுணையாக இருந்தது.

அத்துடன் அலுவலக அல்லது தொழில் ரீதியான அழுத்தங்களின் இருந்து சிறிய ஒரு மாற்றம் / நிவாரணத்தை பெற்றுக் கொள்ள முடியுமாயிருந்ததுடன் வெவ்வேறுப்பட்ட வேலைகளில் ஈடுபடும் ஊழியர்கள் ஒரே குழுவாக செயற்படுவதன் மூலம் தனிநபர் ஒற்றுமை அபிவிருத்தி அடைந்தமைக் குறிப்பிடத்தக்கது.





- **குறித்த பயிற்சி பட்டறையின் விஷேட நிகழ்வுகள் சில**








- ஹன்தான வெளிகள பயிற்சியின் போது அலுவலக ஊழியர்கள் குழு செயற்பாடொன்றில் கலந்து கொண்ட போது

## 3.2 புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும்பதவியுயர்வு நடைமுறைகள்.

புதிய ஆட்சேர்ப்புக்கள்

3.2.1 கடந்த 2015ஆம் ஆண்டின் நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்ட தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவிக்காக 2017.11.01 ஆம் திகதி புதிய ஊழியர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

3.2.2 நிதியத்தின் பதவியணியினுள் காணப்பட்ட சேவை இடைவெளியான முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு நிறுவனத்தின் வலைத்தளம் மற்றும் பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் ஈர்க்கபட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்த்தியான நேர்முகப் பரீட்சைகளை மேற்கொண்டதன் மூலம் முகாமைத்துவ உதவியாளர் III பதவிக்காக நாள்வரும், அலுவலக உதவியாளர் III பதவிக்காக ஒருவரும் 2017.12.04 ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதனடிப்படையில் 2017ஆம் ஆண்டில் 06 புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

### 3.3 நிதியத்தின் சூழலை அபிவிருத்தி செய்தல்

பல வருட காலங்களாக புணரமைப்பு செய்யப்பட்டிராத லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் கட்டடத் தொகுதி தற்காலத்துக்கு பொருந்தும் வகையில் புணர்சீரமைக்கும் செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்புணர்சீரமைப்பு வேலைகளுக்காக ஆகக் குறைந்த விலைப் பெறுமதிகளை காட்டிய சிவில் பாதுகாப்பு திணைக்களம் 2015.09.25 ஆம் திகதி நடாத்திய 828ஆம் நிர்வாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டதோடு இப்புணரமைப்பு செயற்திட்டத்திற்கான ஒழுங்கமைப்பு மற்றும் கட்டணம் செலுத்தும் செயற்பாடுகளின் போது தேவையான செயன்முறைகள் அடிப்படையில் கட்டணப்பட்டியல்களின் பெறுமதிகளை மதிப்பிடல்,மேற்பார்வையிடல் மற்றும் ஆலோசனை வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்கு தேசிய அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு தொடர்பான சட்டரீதியான கூட்டுறவு சங்கம்தெரிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முழு மதிப்பீட்டு தொகையாகிய ரூ.23,462,043.69 ஆகிய வேலைத்திட்ட பெறுமதியில் ரூ.4,532,134.11 செலுத்தப்பட்டு நிறுவனத்தின் புணர்நிர்மாணத்தின் பாரிய பகுதி நிறைவு செய்யப்பட்டுத

### 3.4 அலுவலகப் பணிகளை நவீனமயப்படுத்தல்

- ஒவ்வொரு ஊழியர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கு மேலதிகமாக மற்றைய ஊழியர்களுடைய பொறுப்புக்கள் பற்றியும் தெரிந்திருப்பதன் மூலம் அலுவலக செயற்பாடுகளை எந்தவொரு சிக்கல்களுமின்றி நடாத்திச் செல்ல முடியுமாக உள்ளது.

- நிதியத்தின் கடன் மீள அறவிடல் செயற்பாட்டை நெறிப்படுத்துவதற்காக கடன் மீள அறவிடல் அதிகாரி பதவியை ஏற்படுத்தி அறவிட முடியாக் கடனின் அளவை குறைக்கக் கூடியதாக உள்ளமை.

